இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

# YESUVAI THINAM PARKIREN

Vol : 26
Issue : 06

JUNE 2026

ஆண்டு சந்தா : 100/-
தனிப்பிரதி : 10/-



# வேறு மனுஷனாவாய்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது DIGITAL முறையில் நம்முடைய இணையதளத்திலும்

**WWW.JESUSLIVES.IN**


ஜூன் 12,13
வெள்ளி, சனி
9.30 A.M. to 2.30 P.M.
வானத்தின் வாசலில்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
வானத்தின் வாசல்
சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
EVG. L. வின்சென்ட்ராஜ்
EVG. கலா வின்சென்ட்ராஜ்
தொடர்புக்கு: 94428 00449, 94980 00449


மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC டிப்போ அருகில், மதுரை மாவட்டம்.
2026 ஜூன்
20
காலை 9.30
மணி முதல்
மதியம் 2.30
மணி வரை
3வது சனிக்கிழமை
EVG. L. வின்சென்ட்ராஜ்
EVG. கலா வின்சென்ட்ராஜ்
தொடர்புக்கு:
94428 00449
94980 00449

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதாக கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்து மகிழ்ச்சி அடைகிறேன். ஜெபத்தைக் கேட்பவரே மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள் என்ற வார்த்தையின்படி அவர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு தேசத்திற்கும், நமக்கும் நன்மை செய்தார்.


வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து கடந்த ஏப்ரல் 30 மே 1,2 தேதிகளில் நடைபெற்ற சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாமிற்கு கர்த்தர் முன் குறித்தவர்களை அழைத்து வந்து பெரிய காரியங்களைச் செய்தார்.

நாம் வாழும் இந்த கடைசிக் காலத்தில் எப்படி வேகமாய் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய வேண்டும் என்பதை ஆவியானவர் பேசி வந்திருந்த ஜனங்களை அளவில்லாமல் நிரப்பினார். மேலும் கர்த்தர் செய்யப்போகிறதை தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வக்குமார் அவர்கள் மூலமாக ஆவியானவர் பேசினார். முகாமிற்கு வந்த அனைவருக்கும் தங்குவதற்கு, உணவிற்கு சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

அடுத்து முகாம் கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற அக்டோபர் 1,2,3 தேதிகளில் நடைபெறும். தொடர்ந்து வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து நடைபெறும் ஒவ்வொரு கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து நடத்தி வருகிறார். நம்முடைய ஊழியத்தோடு இணைத்து செயல்படுகிற ஜனங்களை தேவன் எழுப்பவும், அலுவலக பணிக்கு நல்ல ஆட்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள். தமிழகத்தின் தேர்தலில் புதிய தலைமுறைகளை கர்த்தர் எழுப்பி வருகிறார். நல்ல நிலையான ஆட்சியை கொடுக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து ஜூன் மாதத்தில் சென்னையிலும், கன்னியாகுமரியிலும் கூட்டங்கள் உண்டு; இதற்காக ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



இயேசுவின் பணியில்



(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

சகோ. L. வின்சென்ட்ராஜ்



# வேறு மனுஷனாவாய்

**அப்பொழுது கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார், நீ அவர்களோடேகூடத் தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய். 1 சாமு. 10:6**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவராகிய தேவன் முதலாவது சவுலை ராஜாவாகத் தெரிந்து கொண்ட போது அவர் ஒரு சாதாரண மனிதனாக, கழுதை மேய்ப்பவனாக இருந்தார். திடீரென்று அவருடைய கழுதை ஒன்று காணாமற்போனது, அவருடைய தகப்பன் நீ போய் அந்த கழுதையை தேடிக் கொண்டு வா என்று, அந்த பொறுப்பை அவரிடத்தில் கொடுத்து விட்டார். ஆகவே அவன் அக்கறையோடு பல இடங்களில் தேடியும் கழுதையை காணவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் அவர் கூட வந்த மனிதன் சொல்லுகிறான் இங்கே ராமாவிலே ஒரு ஞானதிருஷ்டிக்காரர், தீர்க்கதரிசி இருக்கிறார். அவர் பெயர் சாமுவேல். அவரிடத்தில் போனால் கழுதை எங்கு இருக்கிறது என்பதை நமக்கு சொல்லி விடுவார், வா போகலாம் என்று அழைத்துக் கொண்டு போனான். அப்பொழுது நடந்த மாற்றத்தை தான் நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். சாமுவேல் கழுதையைப் பற்றி கவலைப்படாதே, அது கிடைத்து விட்டது. ஆனால் நீ தேவனுடைய திட்டத்தை, சித்தத்தை செய்ய உன்னை ஒப்புக்கொடு. கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டிருக்கிறார். நீ இஸ்ரவேலை ஆளப்போகிற ராஜாவாக இருக்கிறாய் என்று சொல்லி தைலக்குப்பியை எடுத்து அவனை அபிஷேகம் பண்ணினார். அந்த நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் சவுலின் மேல் இருந்து, அவனை நடத்தினர். அதன் பிறகு அவனுடைய பேச்சு, அவனுடைய வாழ்க்கை மாறி வேறு மனுஷனானான்.

அதே உலகம் தான், அதே பூமி தான், அதே வீடு தான். ஆனால் தேவனுடைய வேலையைச் செய்ய பிரித்தெடுக்கப்பட்டான். ஆம் கர்த்தர் எவனைத் தெரிந்த கொண்டாரோ, எவனை முன்குறித்தாரோ, யாரைக் கொண்டு அவருடைய வேலையைச் செய்ய விரும்புகிறாரோ அவனை வேறு மனுஷனாக, வேறு ஆவியுள்ளவனாக மாற்றுகிறார். வேறு மனுஷன் என்றால் பழைய வாழ்க்கை, பழைய காரியங்கள் எல்லாம் முடிந்து, புதிய மனுஷனாக, புதிய சாயலாக மாற வேண்டும். அதற்குத்தான் தேவன் சவுலை வேறே மனுஷனாக, புதியவனாக மாற்றினார். ஆகவே தான் வேதம் சொல்லுகிறது 1 சாமு 10:9-ல் கர்த்தர் சவுலுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார், புதிய இருதயத்தைக் கொடுத்தார். இதனுடைய உண்மைத் தன்மை என்னவென்றால் கல்லான இருதயத்தை எடுத்து விட்டு உணர்வுள்ள, கனிவான, மென்மையான, இரக்கமுள்ள, மற்றவர்களுக்காக பரிதபிக்கிற

இருதயத்தைக் கொடுத்தார்.

ஆம் வேறே மனுஷன், வேறே இருதயம், இதுவரை தனக்காக, தன் குடும்பத்திற்காக, சுயநலமாக வாழ்ந்த சவுலை தேவன் மற்றவர்களுக்காக, சமுதாயத்திற்காக வாழவும், கர்த்தருடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் ஏற்படுத்தினார். எவ்வளவு ஒரு மேன்மையான வாழ்க்கை, உயர்வான வாழ்க்கை பாருங்கள். ஆகவே தான் வேதம் சொல்லுகிறது **2 கொரி 5:17-ல் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாய் இருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போகிறது எல்லாம் புதிதாயின** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இந்த பூமியில் அவருடைய வேலையைச் செய்கிற, சித்தத்தைச் செய்கிற யாராக இருந்தாலும் தேவன் அந்த மனிதனைப் புதிய மனிதனாக மாற்ற வேண்டியதாயிருக்கிறது. வேறு மனுஷனாக, தேவ சாயலாக மாற்ற வேண்டியதாயிருக்கிறது. அதற்குத்தான் சவுலை வேறே மனிதனாக, வேறே இருதயத்தைக் கொடுத்து பழைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய ஆவியுடையவனாக, புதிய மனிதனாக மாற்றினார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதரனே, சகோதரியே நாமும் வேறே மனுஷனாக, மனுஷியாக தேவனுடைய திட்டங்களை, விருப்பங்களை நிறைவேற்ற நம்மை அர்ப்பணித்து கர்த்தருடையவர்களாக மாறுவோம்.

பேதுருவின் வாழ்க்கையைப் பாருங்கள், அவருக்கு எல்லாமே தோல்வி, வெறுமை, மீன் அகப்படவில்லை, சரியாக தொழில் நடக்கவில்லை. ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்கிற போராட்டமான வாழ்க்கை. இப்படிப்பட்ட நிலையில் தான் இயேசு அவர் படகில் ஏறி பிரசங்கம் பண்ணினார். பிரசங்கம் பண்ணி முடித்தவுடனே அதே படகில், அதே கடலில் மீன் பிடிக்கும்படி கட்டளையிட்டார். அந்த ஒரு வார்த்தையால் ஏராளமான மீன்கள் வலை நிறைய விழுந்தது. அதன் பிறகு அவர் வாழ்க்கை மாறியது. இயேசு சொல்லுகிறார் **லூக் 5:10-ல் பயப்படாதே, இது முதல் நீ மனுஷனைப் பிடிக்கிறவனாவாய் என்றார்.** மீன் பிடித்த அவரை தேவனுடைய உன்னதமான வேலைக்கு, ஊழியத்திற்கு தேவன் அழைத்தார். வேறு மனுஷனாய் மாற்றினார். அதன் பிறகு அவர் வாழ்க்கை மாறியது. அவருடைய திட்டம் முடிந்தது, தேவனுடைய திட்டம் நிறைவேற ஆரம்பித்தது. பரலோக மேன்மைக்காக வாழ ஆரம்பித்தார். அவரைக் கொண்டு தேவன் பூமியில் செய்ய நினைத்ததை செய்து முடித்தார். அதே தேவன் இன்றைக்கு உங்களையும் ஆசீர்வதிப்பார். உன்னத வேலைக்கு உங்களை நியமிப்பார். வேறு மனிதர்களாக உங்களை மாற்றுவார். இப்படித்தான் சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக மாற்றி, வேறே மனுஷனாக மாற்றி, வேறே இருதயத்தைக் கொடுத்தவர், உங்களையும் வேறு மனுஷர்களாக மாற்றி உங்களை ஆசீர்வதித்து நடத்துவார். உங்கள் பழைய வாழ்க்கை ஒழியும், எல்லாம் புதிதாகும், ஆண்டவராகிய தேவன் உங்களை புதிய மனிதர்களாக, வேறு மனிதர்களாக மாற்றுவாராக.

## வேறு வழிகளில் நடந்தவர்கள்

**பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்குப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு வேறே வழியாய் தங்கள் தேசத்திற்கு திரும்பி போனார்கள். மத்தேயு 2:12**

ஒரு தேவனுடைய பிள்ளையின் வழி எப்பொழுதும் தனி வழி தான். அவன் தேவனால் வழி நடத்தப்பட வேண்டும். அவன் சொந்தமாய், சுயமாய் எதையும் செய்யக் கூடாது, நடக்கக் கூடாது, காரணம் நமக்கு இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். அவர் நமக்கு நியமித்த வழியில் தான் நாம் நடக்க வேண்டும், ஓட வேண்டும், செயல்பட வேண்டும். ஆகவே தான் வேதம் சொல்லுகிறது **எரே 10:23-ல் கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன் என்றார்.** நாம் தேவனுடைய காரியங்களைச் செய்யும் போது அவர் வழியாய் தான் நடக்க வேண்டும். இதைத்தான் **சங் 103:7-ல் வாசிக்கிறோம் அவர் தமது வழிகளை**

**மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார்.** ஆனால் நாம் பல வேளைகளில் நம் சுய இஷ்டப்படி நடந்து, வழிதவறி, காணாமற் போன ஆட்டைப் போல வழி தப்புகிறோம். இதைத்தான் **ஏசா 53:6-ல் வாசிக்கிறோம் நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்** என்று சொல்லப் பட்டுள்ளது.

தேவனுடைய வழி உத்தமமானது, அது உயர்ந்தது. அதிலே நடக்கிறவர்கள் இடறுவதில்லை, திசை கெட்டுப்போவதில்லை. ஆனால் சாத்தான் பாருங்கள் குறுக்கு வழியாய், வேறு வழிகளில் நம்மை நடத்தி வழி விலகப்பண்ணுகிறான். தேவனுடைய வழியை புரட்டிப் போடுகிறான். இயேசு சொன்னார் **யோவா 10:1-ல் ஆட்டுத் தொழுவத்திற்குள் வாசல் வழியாய் பிரவேசியாமல் வேறு வழியாய் வருகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்.** தேவனுடைய பாதைகளில் நடக்காமல், விஞ்ஞானத்தின் பாதையில், மனிதர்களுடைய ஆலோசனையில் வழிதப்பி நடக்கப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட பாதைகள் எதுவும் நம்மை தேவனுடைய வழிகளில் நடத்தாது. வேறு ஏதாவது வேதனையின் பாதையில், வழியில் தான் நடத்தும்.

**யாக்கோபு 2:25-ஐ வாசித்துப் பாருங்கள் ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக் கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்டாள்** என்று வேதம் சொல்லுகிறது. இதுவரை பாவத்திற்கு அடிமையாக இருந்தவள், தேவனுக்கு விரோதமாக வாழ்ந்தவள். இப்பொழுது தேவன் அனுப்பின ஊழியர்களை ஏற்றுக்கொண்டு, தூதர்களை ஏற்றுக்கொண்டு தேவனால் எச்சரிக்கப்பட்டு வேறு வழியில் புதிய வழிகளில் நடக்க ஆரம்பித்தாள். இதுதான் புதிய வழி, புதிய பாதை, பழைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தேவனுடைய வழிகளில் நடந்தாள். இதுவரை ராகாப் என்ற பெண்ணை யார் யாரோ ஆண்டார்கள், அடிமைப்படுத்தினார்கள். ஆனால் இப்பொழுதோ புதிய வழிகளில் நடந்தாள். இதுதான் வேறு மனுஷனாய் மாறுவது. **ஏசா 26:13 சொல்லுகிறது எங்கள் தேவனாகிய கர்த்தாவே உம்மையல்லாமல் வேறே ஆண்டவமார்கள் எங்களை ஆண்டார்கள். இனி உம்மை மாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்துவோம் என்றார்.** ஆம் நாம் இனி நம்முடைய பழைய வழிகளை அகற்றி, புதிய வழிகளில் நடந்து வேறு மனுஷர்களாய் மாறுவோம். இப்படிப்பட்ட உன்னதமான வாழ்க்கைக்குத் தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே வேறு மனிதர்களாக அவருடைய வழிகளில் உங்களை நடத்துவாராக.

## வேறு ஆவியுடையவர்களாக மாற்றுவார்

**என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியுடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன். எண் 14:24**

வேறே மனுஷன், வேறே இருதயம் என்றவர், அடுத்து வேறே ஆவியுடையவர்களாக நம்மை மாற்றுகிறார். நாம் வாழும் இந்த உலகத்தில் விதவிதமான ஆவிகள் கிரியைச் செய்கிறது என்று சொல்லப்படுகிறது. பொல்லாத ஆவிகள், அசுத்த ஆவிகள், குழப்பத்தின் ஆவிகள் செயல்படுகின்றன. இந்த ஆவிகள் எல்லாம் நம்மை தேவனுக்கு விரோதிகளாகவும், பகைவர்களாகவும் மாற்றுகிறது. உலகத்தின் காரியங்களிலும், இச்சைகளிலும் நம்மை ஈடுபட வைக்கிறது. **ஆகவே தான் ஆண்டவராகிய இயேசு சொன்னார் லூக் 9:55-ல் நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்களா என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்க அல்ல இரட்சிப்பதற்கே வந்தார்.** யாராவது நமக்கு விரோதமாய் பேசினால், எதிர்த்தால், எதிர்மறையான கருத்துக்களைச் சொன்னால் நாம் அவர்கள் மேல் கோபப்பட்டு, சபித்து, அவர்களையும் கோபப்படுத்தி, அவர்கள் உள்ளத்தை உடைத்து விடுகிறோம், வேதனைப்படுத்தி விடுகிறோம்.

சவுல் ராஜாவுக்கு இந்த ஆவியிருந்தது. **1 சாமு 18:8,9-ல் அந்த வார்த்தை சவுலுக்கு எரிச்சலாயிருந்தது, விசனமாயிருந்தது. அதுமுதல் சவுல் தாவீதை காய்மாகாரமாய்ப் பார்த்தான்.** இந்த ஆவியோடு போராடி அவன் தேவனுடைய ஆவியை இழக்க தேவன் விரும்பவில்லை. வேறே ஆவியை வேறே இருதயத்தை கொடுக்க விரும்பினார். பவுல் எழுதுகிறார் **1 கொரி 2:12-ல் நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டதை அறியும்படிக்கு தேவனிடமிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்றார்.** ஆம் நாம் பெற்றது உலகத்தின் ஆவியை அல்ல. உலகத்தையும், நாகரீகத்தையும், விஞ்ஞானத்தையும் அறிந்து கொள்ள அல்ல தேவனை அறியவும், அவருடைய ராஜ்யத்தை அறிந்து அதற்காக வாழவும், செயல்படவும் தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர், உன்னதத்திலிருந்து வரும் ஆவியானவர் உங்களை நிரப்ப வேண்டும். இந்த ஆவியில்லாதவன், இந்த பரிசுத்த ஆவியைப் பெறாதவன் கிறிஸ்தவன் அல்ல. **ரோமர் 8:9 சொல்லுகிறது தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாமசத்திற்குட்படாமல் ஆவிக்குட்பட்டவர்களாய் இருப்பீர்கள்.** கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல என்றால், நாம் காலேப் பெற்ற ஆவியைப் போல் தேவனுடைய ஆவியைப் பெற வேண்டும். உன்னதமானவரின் ஆவியைப் பெற வேண்டும் அப்பொழுதுதான் வேறு மனுஷனாய் மாறி தேவனுடைய வேலையைச் செய்ய முடியும், தேவனுடைய சித்தத்தைச் செய்ய முடியும். மோசே இந்த ஆவியைப் பெற்றிருந்தார், யோசேப்பு இந்த ஞானத்தின் ஆவியைப் பெற்றிருந்தார். தாவீது இந்த பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார். தானியேல் இந்த ஆவியைப் பெற்றிருந்தார். இயேசு கிறிஸ்து இந்த ஆவியினாலும் வல்லமையினாலும் நிரம்பி முழு மனுக்குலத்தையே இரட்சித்து நித்திய வாசிகளாக நம்மை மாற்றினார்.

இன்றைக்கு நாம் இந்த ஆவியைப் பெற்றால் தான் உன்னதமானவருக்குப் பிள்ளைகளாக இருக்க முடியும். அவருடைய தாசனாகிய மோசே சொல்லுகிறார் **எண் 11:29-ல் கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்க கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப் பண்ணினால் நலமாயிருக்குமே என்றார்.** இந்த தேவனுடைய ஆவியைப் பெறுகிறவன் வேறு மனுஷனாகிய உலகத்திலே கறைபடாமல் வாழ்ந்து, கர்த்தருடைய பணிகளை, ஊழியத்தை செய்து கர்த்தருக்குப் பிரியமாயிருப்பான். ஆண்டவராகிய தேவன் சொன்னார் **அப் 2:17,18 வசனங்களில் கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள், உங்கள் வாலிபர்கள் தரிசனங்களைப் அடைவார்கள், உங்கள் மூப்பர்கள் சொப்பனங்களைக் காண்பார்கள். என்னுடைய ஊழியக்காரர் மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் என்றார்.** அந்த தேவனுடைய வாக்களிக்கப்பட்ட ஆவியைப் பெற்று நீங்கள் வேறு மனுஷனாகி கர்த்தருக்காக பிரகாசிப்பீர்கள். என் ஆண்டவராகிய தேவன் உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக. இல்லை என்றால் வேறு ஆவி வந்து உங்களைத் தாக்கி, உங்களை தேவனிடத்திலிருந்து பிரித்துவிடும், உங்கள் ஆத்துமாவை கொன்றுவிடும்.

ஆண்டவராகிய இயேசு சொன்னார் **மத். 12:45-ல் அசுத்தஆவி ஒரு மனுஷனை விட்டு புறப்பட்டுப் போனபின்பு வறண்ட இடங்களில் சுற்றித்திரிந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் நான் விட்டு வந்து என் வீட்டிற்கே திரும்பி போவேன் என்று சொல்லி திரும்பிப் போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு வந்து. உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும், அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும் என்றார்.** நம்மை தேவனை விட்டுத் திருப்ப, பிரிக்க சாத்தான் பலமாய் போராடுகிறான். தன்னிலும் பொல்லாத

வேறே ஆவிகளை கூட்டிக் கொண்டு வந்து நம்மை அவனுக்கு அடிமைப்படுத்த முயற்சிக்கிறான். அவனை மேற்கொள்ள நம்முடைய பெலத்தால் முடியாது, நம்முடைய பக்தியினால் முடியாது, தேவனுடைய ஆவி நம்மேல் இருந்தால் தான் அவனை மேற்கொள்ள முடியும். ஆகவே நம்முடைய மாம்சத்தை சாத்தான் மேற்கொள்ளாமல் இருக்க, நம்முடைய மாம்சத்தில் நாம் தேவனுடைய ஆவியை பெறுவோம். அப்பொழுது தான் நாம் வேறு மனிதர்களாக மாற முடியும், வாழ முடியும்.

## வேறு சிந்தை

**பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன் பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக் கொண்டார்கள்.** அப் 28:3-6

இன்றைக்கு மனிதர்களுடைய சிந்தனை, நினைவுகள் எப்பொழுதும் தாறுமாறானதை, தவறானதை யோசிக்கும். எப்பொழுது பார்த்தாலும் யாரையாகிலும் குறைசொல்லி, குற்றப்படுத்தி, நடக்காததை நடந்ததாகச் சொல்லி, தவறானவைகளை யோசிக்கும். ஆண்டவராகிய தேவன் சொன்னார் **ஆதி 6:5-ல் மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டார்.** சாத்தான் இன்றைக்கு மனிதர்களை பிடிக்கும் போது, தாக்கும் போது சிந்தையைத் தான் தூண்டுகிறான், தவறானவைகளை விதைக்கிறான். யோவான் 13:2-ல் சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத் அவரைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைக் துண்டினான் என்று சொல்லப்பட்டுள்ளது ஆம் மனிதர்கள் வேறு சிந்தையாக, தேவனுக்கு விரோதமானவைகளை யோசிக்கிறார்கள். அதிலே சாத்தானுக்கும் இடம் கொடுத்து விடுகிறார்கள். தேவனுக்கு விரோதமானவைகளை பேசுகிறார்கள். ஆகவே தான் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் **ரோமர் 8:6-ல் மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆம் நமக்கு எப்பொழுதும் கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்க வேண்டும். **1 கொரி 2:16-ல் எங்களுக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது என்றார்.** இன்றைக்கு எந்த சிந்தை உங்களுக்கு உண்டாயிருக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையா? சாத்தானின் சிந்தையா? எது நம்மை நிரப்புகிறது.

பேதுருவைப் பாருங்கள், அவர் எப்பொழுதும் தேவனுக்கு ஏற்றவைகளை சந்திக்காமல், மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்தித்தார். **மத் 16:23-ல் இயேசு திரும்பி பேதுருவை பார்த்து எனக்குப் பின்னாக போ சாத்தானே? நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், தேவனுக்குப் ஏற்றவைகளை சிந்திக்காமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சந்திக்கிறாய் என்றார்.** ஆம் இன்றைக்கு நமக்குள் எழும்புகிற பொல்லாத சிந்தனைகளை தேவன் மாற்றி நமக்குள் புதிய சிந்தையை, தேவனுடைய சிந்தையை தருவார். அதனால் தான் தேவன் நமக்கு வேறே சிந்தையைக் கொடுக்கிறார். வேறே ஆவியைக் கொடுக்கிறார். **பிலி 2:5 சொல்லுகிறது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்றார்.** ஆதனால் தான் தேவன் நமக்கு அவருடைய சிந்தையை கொடுக்கிறார், அவருடைய மனநிலையை நமக்குக் கொடுக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களுக்கு வேறு சிந்தையை, வேறு இருதயத்தை, வேறு ஆவியை கொடுத்து உங்களை வேறு மனுஷர்களாக மாற்றுவாராக.



# உன் மீதில் உன் கிரீடம் பூக்கும்

**சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். எந்த பூவும் பூத்துவிட்டால் தான் அழகு இருக்கும். அதிலிருந்து வாசனை வரும், பயன்படுத்த கொண்டு செல்லப்படும். **சங் 132:8-ல் அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன், அவன் மீதிலோ அவன் கிரீடம் பூக்கும்** என்று ஆண்டவர் தாவீதுக்கு சொல்லுகிற வார்த்தையை வாசிக்கிறோம். இன்றைக்கும் நம்மை பார்த்து உன் மீது உன் கிரீடம் பூக்கும் என்று தான் ஆண்டவர் சொல்லுகிறார். நம் மீது கிரீடம் சூட்டி அதை மலரப்பண்ணுகிறவர் நம் ஆண்டவர். ஏனென்றால் நம் மீது இந்த கிரீடத்தை வைக்க இயேசு தம் தலையில் முள்முடியை ஏற்று எல்லாப் பாவத்தையும், சாபத்தையும் தாம் சுமந்து கொண்டார்.

அனாதையாய் யாருமற்றவளாக வாழ்ந்த எஸ்தர், ராஜ அரண்மனைக்கு கொண்டு வரப்பட்ட போது ராஜாவின் கண்களில் அவளுக்கு தயவும், பட்சமும் கிடைத்தது. **எஸ் 2:17-ல் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின் மேல் வைத்து அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரியாக்கினான்.** எத்தனை பெரிய மேன்மை. அவளது முந்தைய வாழ்க்கை யாருமற்ற அனாதை, ஆனால் இப்போது ராஜாத்தி, எவ்வளவு கிருபை, அதே கிருபையால் தான், இன்று ஒருவேளை புறக்கணிக்கப்பட்ட, தள்ளப்பட்ட, அவமானப்படுத்தப்பட்ட வாழ்க்கையில் நீங்கள் போய் கொண்டிருக்கலாம், உங்கள் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்தி உங்கள் மீது உங்கள் கிரீடம் பூக்கும்படி தேவன் செய்வார். மனம் கலங்காதிருங்கள்.

தாவீது தன் **சங்கீதம் 21:3-ல் உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டு வந்து, அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர் என்கிறான்.** வெற்றி பெற்று வருகிறவர்களுக்கு இப்படிப்பட்ட வரவேற்பும், அன்பளிப்பும், கனமும் கிடைக்கும். சோதோம் கொமோராவை சிறைப்பிடித்து அதிலிருந்த லோத்தையும், அவன் குடும்பத்தையும் எதிரிகள் கொண்டு போயிருக்கும் போது, ஆபிரகாம் தன் வீட்டில் கைபடிந்த முந்நூற்று பதினெட்டு வேலைக்காரர்களைக் கொண்டு எதிரிகளை வீழ்த்தி சோதோம் கொமோராவை மீட்டு வந்தான். அப்போது **ஆதி. 14:19-20-ல் அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும், திராட்சைரசமும் கொண்டு வந்து, அவனை ஆசீர்வதித்து, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று**

**சொன்னான்.** இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் என்று வாசிக்கிறோம்.

உத்தம ஆசீர்வாதத்தோடு எதிர்கொண்டு வந்து அப்பமும், திராட்சை ரசமும் கொண்டு வந்து அவனை ஆசீர்வதித்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். **எபி 7:2-ல் மெல்கிசேதேக் என்பதற்கு சமாதானத்தின் ராஜா என்றும் அர்த்தமாம்** என்று கூறுகிறது. அந்த சாலேமின் ராஜா சமாதானத்தின் ராஜா, நீதியின் ராஜா இயேசு கிறிஸ்து தான். அவர் உத்தம ஆசீர்வாதங்களோடு எதிர் கொண்டு வந்து ஆபிரகாமை ஆசீர்வதித்தார்.

தாவீது வாழ்க்கையிலும் அப்படித்தான். எத்தனை எதிரிகள், எதிர்ப்புகள் அவற்றின் மத்தியில் ஜெயத்தைக் கொடுத்து, எபூசின் குடிகள் அவனை இதில் நீ பிரவேசிப்பதில்லை என்ற போதும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான். அது தாவீதின் நகரமாயிற்று. முழு இஸ்ரவேலுக்கும் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான் சேனைகளுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார். **2 சாமு 12:29,30-ல் தாவீது ரப்பாவுக்கு போய் அதின் மேல் யுத்தம் பண்ணி அதைப் பிடித்தான், அவர்களுடைய ராஜாவின் தலையின் மேல் இருந்த கிரீடத்தை எடுத்துக் கொண்டான். அது தாவீதின் தலையின் மேல் வைக்கப்பட்டது.** 1 நாளா 11:9-ல் பல்வேறு விதமான யுத்தங்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்த தாவீதை உத்தம ஆசீர்வாதங்களோடு எதிர்கொண்டு வந்து அவன் சிரசிலே பொற்கிரீடங்களைத் தரித்ததாக சொல்கிறான். அதே தேவன் நம் வாழ்விலும், எத்தனை விதமான போராட்டங்கள் வந்தாலும் ஜெயத்தை தந்து பொற்கிரீடத்தை நம் தலையிலும் சூட்டுவார்.

**1 கொரி 9:24,25-ல் பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள், ஆகிலும் பந்தையத்தை (பரிசை) ஒருவனே பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாய் ஓடுங்கள், பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் என்று பவுல் எழுதுகிறார்.** ஆவிக்குரிய வாழ்வில் அழிவில்லாத கிரீடத்தை பெறும்படி ஓடிக்கொண்டிருக்கிற எல்லாருமே அந்த கிரீடத்தைப் பெற முடியும், பெற்றுக் கொள்ள வேண்டும் என்று யாரெல்லாம் ஓடுகிறோமோ அத்தனை பேருக்கும் அந்த ராஜகிரீடத்தை, அழிவில்லாத கிரீடத்தை தேவனாகிய கர்த்தர் தருவார்.

## பரிசுத்த கிரீடம்

மோசே, ஆரோனை ஆசாரியனாக கர்த்தர் சொன்னபடி அவனுக்கு ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து விசேஷமான உடைகளை உடுத்தி **லேவி 8:9-ல் அவன் தலையிலே பாகையை தரித்து பாகையின் மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தை கட்டினான்.** ஆரோனுக்கு விசேஷமான பரிசுத்த கிரீடத்தை கட்டினது போல இன்று நம்மையும், ஆசாரியர்களாக தெரிந்து கொண்ட தேவன் நம் தலையிலும் ஒரு விசேஷித்த பாகையை வைத்து பரிசுத்த கிரீடத்தை வைக்கிறார். **லேவி 21:10-12-ல் தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனாகத் தன் சிரசில் அபிஷேகதைலம் வார்க்கப்பட்டவனும், அவனுக்குரிய வஸ்திரங்களைத் தரிக்கும்படி பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாயிருக் கிறவன் எவனோ, அவன் தன் பாகையை எடுக்காமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளாமலும், பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும்**

**இருப்பானாக, அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன்மேல் இருக்கிறதே, நான் கர்த்தர் என்று ஆண்டவர் சொன்னார்.**

நம்மேல் பரிசுத்த கிரீடம் இருக்கிறது. தேவனுடைய அபிஷேகத்தைலம் என்றும் கிரீடம் இருக்கிறது. இந்த தெய்வ பயத்தோடு நாம் வாழ வேண்டும். நம் பாகையை நாம் கழற்றக் கூடாது. நம்மை தீட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. என் சத்துருக்களுக்கு முன்பாக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் செய்கிறார், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்று தாவீது சொல்கிறார். இந்த அபிஷேகத்தைலம் என்னும் கிரீடத்தை நாம் காத்துக் கொள்ள வேண்டும். நாம் காத்துக் கொள்ளுகிறோமா? இல்லாவிட்டால் இழந்து போனோமா? தாவீது பத்சேபாளிடத்தில் விபச்சாரப் பாவத்தில் விழுந்த போது **சங் 51:11-ல் உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும் என்று கதறினான்.**

## கிரீடம் விழுந்தது

எரேமியா தன்னுடைய புலம்பலில் கர்த்தாவே எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும், எங்கள் நிந்தையை நோக்கிப்பாரும் எனறு ஏதோ ஒரு கடுமையான பாதையில் புலம்பி கதறுகிறான். எங்கள் பிதாக்கள் பாவம் செய்து மாண்டு போனார்கள். நாங்கள் அக்கிரமங்களைச் சுமக்கிறோம். **புல 5:16-ல் எங்கள் தலையிலிருந்த கிரீடம் விழுந்தது. ஐயோ, நாங்கள் பாவம் செய்தோமே, அதினால் எங்கள் இருதயம் பலட்சியமாயிற்று. அதினால் எங்கள் கண்கள் இருண்டு போயின என்கிறான்.** ஐயோ, நாங்கள் பாவம் செய்தோமே, எப்படிப்பட்ட கதறுதல் பாருங்கள். எப்படி கிரீடம் சூட்டி ராஜாவாக, ராஜாத்தியாக இருக்க வேண்டியவர்கள் பாவத்தினால் கிரீடம் விழுந்தவர்களாய் மேன்மையை இழந்து போனோமே.

இதைப்பற்றி எரேமியா கூறும் போது **எரேமியா 13:15-18ஐ வாசித்தால் நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள், மேட்டிமையாய் இராதேயுங்கள், கர்த்தர் விளம்பினார். அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும், இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறுவதற்கு முன்னும், நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும் போது, அவர் அதை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள். நீங்கள் இதைக் கேளாமற்போனீர்களானால், என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கித்து, கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப் போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும். நீங்கள் ராஜாவையும் ராஜாத்தியையும் நோக்கி, தாழவந்து உட்காருங்கள், உங்கள் சிரசின் சிங்காரமாகிய உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்ததென்று சொல்லுங்கள் என்கிறார்.**

இதில் எழுதப்பட்ட வார்த்தையை நாம் வாசிக்கும் போது நேபுகாத்நேச்சார் ராஜாவின் வாழ்க்கையை நாம் பார்க்கலாம். எவ்வளவு மேன்மையான ராஜா, பெரிய விருட்சமாய் வளர்ந்த ராஜ்யம், அவன் உள்ளத்தில் ஒரு நாள் நான் கட்டின மகா பாபிலோன் என்று மேட்டிமைக்கும், பெருமைக்கும் இடம் கொடுத்தான். நான் என்ற எண்ணம் அவனை கீழே விழத்தள்ளியது. ஒரு மாட்டைப் போல புல்லை மேய்ந்து எல்லாராலும் வெறுக்கப்பட்டான். எல்லாரும் அவனை விட்டு விலகினார்கள். ராஜ்யத்தின் மகிமை போய்விட்டது, முகக்களையும் இழந்தான். இந்த பரிதாப நிலைக்கு காரணம் பெருமை. லூசிபர் இந்த பெருமையினால் தானே தாழ தள்ளப்பட்டான். அதினால் தான் ஆண்டவர் நான சொல்லுவதை செவிகொடுத்துக் கேளுங்கள், மேட்டிமையாய் இராதேயுங்கள், ராஜாவையும், ராஜாத்தியையும் நோக்கி தாழ வந்து உட்காருங்கள், இதை நீங்கள் கேளாமற்போனால் மறைவிடங்களில் உங்கள்

பெருமையை நினைத்து நான் கண்ணீர் சிந்துவேன் என்கிறார். ஆண்டவர் உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்தது என்றார். பாவம் செய்ததால், கீழ்ப்படியாமையால் ஆதாம் ஏவாள் தங்களை மூடியிருந்த மகிமையின் ஆடையை இழந்தார்கள். பெருமையாலும், மேட்டிமையாலும் நேபுகாத்நேச்சார் ராஜ்யத்தின் மகிமையை இழந்தான். நம்முடைய வாழ்வில் இந்த கிரீடத்தைக் காத்துக் கொள்ளாமல் ஐயோ, நாங்கள் பாவத்தினால் மேன்மையை இழந்து போனோமே என்று சொல்லுகிறவர்களாய் இருக்கிறோமா?

நேபுகாத்நேச்சார் தானி 4:34-36 வரை வாசிக்கும் போது **அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது, அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன், அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள், அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி, என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன். அவ்வேளையில் என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது, என் ராஜ்யபாரத்தின் மேன்மைக்காக என் மகிமையும் என் முகக்களையும் எனக்குத் திரும்பி வந்தது, என் மந்திரிமாரும் என் பிரபுக்களும் என்னைத் தேடிவந்தார்கள், என் ராஜ்யத்திலே நான் ஸ்திரப்படுத்தப்பட்டேன். அதிக மகத்துவமும் எனக்குக் கிடைத்தது என்கிறான்.** இழந்து போன அந்த ராஜ்யபாரம் திரும்ப அவனுக்கு கிடைக்க கண்களை வானத்திற்கு ஏறெடுத்து உன்னதமானவரை ஸ்தோத்தரித்து, புகழ்ந்து மகிமைப்படுத்தினதினிமித்தம் அவன் இழந்த கிரீடம் அவனுக்கு திரும்ப கிடைத்தது.

இன்றைக்கு தேவனுக்குரிய மகிமையை தேவனுக்கு செலுத்தாததினிமித்தம் நம் கிரீடம் விழுந்து போனதா? யோசித்துப் பார்த்து பெருமைகளை, மேட்டிமைகளைக் களைந்து தாழ வந்து உட்கார்ந்து நம்மை தாழ்த்தினால் இழந்த கிரீடம் நமக்கு வரும். **வெளி 4:10,11-ல் இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து, கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.** எத்தனை அதிகமாய், தாழ்மையாய் கர்த்தருக்கு கனத்தையும், மகிமையையும் செலுத்தி, நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர் என்று மகிமைப்படுத்துகிறார்கள். நான் கட்டினது என்று சொல்லாமல் நீரே சிருஷ்டித்தீர் என்று மகிமையை கர்த்தருக்கு செலுத்தினது போல நாமும் கவனமாய் நடந்து எல்லாவற்றிலும் கர்த்தரை மகிமைப்படுத்த நம்மை ஒப்புக்கொடுப்போம்.

## ஜீவ கிரீடம்

யாக்கோபு தன் நிருபத்தில் **சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவன் அவன் உத்தமன் என்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான் என்கிறான். யாக்கோபு 1:12.** சோதனை ஏன் வருகிறது என்று கலங்காமல் அது வந்தால் தான் அடுத்த வகுப்பிற்கு நான் செல்ல முடியும் என எண்ணி சோதனையினின்று என்னை இரட்சியும் என்று ஜெபித்து ஆண்டவர் கரத்தை பற்றிக் கொண்டு சோதனை நேரத்தில் விசுவாச அறிக்கை செய்யுங்கள். இந்த கடனைக் கட்டி வெளியே

வருவேன், என் பிள்ளைக்கு தடை நீங்கி திருமணம் நடக்கும், என் பிள்ளைகளின் பிள்ளைகளை நான் காண்பேன், நல்ல வருமானம் எனக்கு வரும், என் தொழில், வியாபாரம் செழிக்கும், வியாதி நீங்கி பிழைப்பேன், என் குடும்பத்தின் சமாதானம் பெருகும் என்று சொல்லி வெற்றி பெறுங்கள். சோதனையைத் தாண்டி வெளியே வருவீர்கள். **வெளி 2:10-ல் நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்து நாள் உபத்திரவப் படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்** என்று ஆண்டவர் சிமிர்னா சபைக்கு சொல்லுகிறதை நமக்குச் சொல்கிறார். மரணபரியந்தம் உண்மையாயிரு பாடுகளைக் குறித்து கலங்காதே, இந்த சோதனை முடிந்ததும் எனக்கு வெற்றி தான். யோபு அவர் என்னைச் சோதித்தபின் பொன்னாக விளங்குவேன் என்கிறார்.


யோசேப்பு சிறைச்சாலையில் கிடக்கும்போது தனக்கு கிரீடம் வரும் என்று நினைத்திருக்க மாட்டான். எப்போது எனக்கு விடுதலை கிடைக்கு, என் மேல் விழுந்த பொய் குற்றச்சாட்டுகள், அவதூறுகள் மாறி நான் வாழ்ந்தாலே போதும் என்று தான் நினைத்திருப்பான். ஆனால் தேவனோ எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். போத்திபார் மனைவி எங்கு ஓடி ஒளிந்திருப்பாளோ, அவதூறு பேசினவர்களும் அதை நம்பினவர்களும் எங்கு ஓடி மறைந்தார்களோ, பகைத்து வெறுத்து குழியில் போட்டவர்கள், காலில் வந்து விழுந்தார்கள். தேசத்திற்கே அல்லது முழு உலகத்திற்கே பஞ்சகாலத்தில் உணவளிக்கும் இரட்சகனாக யோசேப்பை உயர்த்தினார். அதற்கு முன்னால் இந்த சோதனையை சகிக்கவும், கடக்கவும் வேண்டியதாயிருந்தது. ஒருவேளை நீங்கள் கூட ஏதோ ஒரு சோதனையை கடந்து போகிறீர்களோ? மனம் கலங்காதீர்கள் யோசேப்புக்கு தேவன் கொடுத்த கிரீடத்தை நமக்கும் தருவார். **2 தீமோ.4:7,8-ல் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது** என்று தைரியமாகச் சொன்னான். பவுல் நீதியின் கிரீடம் எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என்கிறார்.


**வெளி 3:10,11-ல் பிலதெல்பியா சபைக்கு ஆண்டவர் என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன். இதோ, சீக்கிரமாய் வருகிறேன், ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்கிறார்.** பரிசுத்த கிரீடத்தை, மகிமையின் கிரீடத்தை, அபிஷேக கிரீடத்தை, ராஜரீக கிரீடத்தை, நீதியின் கிரீடத்தை வெறொருவர் எடுத்துக் கொள்ளாதபடி அதைப் பற்றிக் கொண்டு தொடர்ந்து இயேசுவை பின்பற்றுவோம். **1 பேதுரு 5:4-ல் மேய்ப்பர்களுக்கு மூப்பனாய் இருந்து கண்காணிப்பு செய்கிறவர்கள் இறுமாப்புடன் ஆளாமல், முன்மாதிரியாய் இருந்தால் அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள் என்று எழுதுகிறார்.** நம்முடைய கிரீடம் வாடிப்போகிற கிரீடம் அல்ல, அது பூத்து, காய்த்து, உலகத்தை பலனால் நிரப்பும் நாட்கள் வருகிறது. கர்த்தர் அந்த கிரீடத்தை தருவார். ஒருவேளை அதை இழந்திருந்தால் மீண்டும் தந்து ஆசீர்வதிப்பார். ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவருக்கும் கிரீடத்தை தந்து அது பூக்கவும், காய்க்கவும், பலன் தரவும் செய்வாராக.

## வானத்தின் வாசல்

# சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த ஏப்ரல் 30, மே 1, 2 தேதிகளில் நமது வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாம் நடைபெற தேவன் கிருபை செய்தார். நம் தேசத்தின் பல மாநிலங்களில் இருந்தும் (மகாராஷ்ட்ரா, குஜராத், ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி) தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் தேவனால் முன்குறிக்கப்பட்ட அநேக சுவிசேஷகர்களையும், சுவிசேஷகிகளையும் தேவன் அழைத்து வந்தார். மூன்று நாட்களும் தேவபிரசன்னத்தில் ஜனங்களைக் களிகூரச்செய்தார். நம் சகோதரி கலாவின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல் ஆராதனை, தேவ செய்தியின் மூலம் இந்த கடைசி காலத்தில் தேவனுக்காக எப்படி செயல்பட வேண்டும், எப்படி சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பதை தெளிவாக கற்றுக் கொடுத்தார்கள். நம் சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்கள் சோர்ந்து போய் மனமுடைந்த நிலையில் இருந்த ஒவ்வொரு சுவிசேஷகர்களையும் தேவவார்த்தையின் மூலம் உயிர்மீட்சி அடையச் செய்தார்கள். சகோதரர். ஜோனத்தன், சகோதரி. ஏஞ்சலின் ஜோனத்தன் அவர்கள் இருவரும் காலை மாலை ஆராதனை வேளையில் ஒவ்வொருவரையும் ஆவியில் தேவனோடு நெருங்கிச் சேர வைத்தார்கள். தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் மூலமாக இந்த கடைசி காலத்தில் தேவனுக்காக நாம் எவ்வளவு தீவிரமாக செயல்பட வேண்டும் என்பதையும், இனி இந்த தேசத்தில் வரவிருக்கும் தீமைகளைக் குறித்தும், அதை தடுக்க நாம் ஜெபிக்க வேண்டிய விதங்களைக் குறித்தும் திட்டமும் தெளிவுமான பேசினார்கள். இதற்காக தேவன் சிலரை முன்குறித்து தமது விசேஷித்த ஆவியினால் நிரப்பினார். அனைவரும் ஆவியில் வைராக்கியம் கொண்டு செயல்பட எச்சரிக்கப்பட்டார்கள். மேலும் அந்நாட்களில் நல்ல மழையை தேவன் கட்டளையிட்டார். அனைவருக்கும் ஆவிக்குரிய ஆகாரத்தோடு சரீரப்பிரகாரமான உணவும் வழங்க தேவன் கிருபை செய்தார். எல்லாத் தேவைகளையும் சந்தித்து நேர்த்தியாய் முகாமை நடத்தி தந்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி நன்றி.











### செம்பட்டியில் நடைபெற்ற

# ஆசீர்வாத உபவாச ஜெபம்














ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் தமது சுவிசேஷம் மையத்தில் வைத்து ஒவ்வொரு மாதமும் நடைபெற ஆசீர்வாத உபவாச ஜெபத்தைக் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். அநேக மக்களை தேவன் கூட்டி சேர்ந்தார். நம் சகோதரி கலாவின்செண்ட்ராஜ் அவர்கள் பாடல்கள் ஆராதனையை நடத்தினார்கள். மேலும் ஆராதனையில் வேளையில் ஒவ்வொருவருடைய பாழான காரியங்கள், பாழான வாழ்க்கையை தேவன் சரிசெய்வார். உங்களை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாற்ற உங்களை ஒப்புக் கொடுங்கள் என்று சொல்லி தேவனுக்கு அர்ப்பணிக்க வைத்தார். மேலும் சகோதரர் வின்செண்ட் ராஜ் அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் நீ வேறு மனுஷனாவாய் என்ற தலைப்பில் நாம் தேவனுக்கு பிரியமானவர்களாய் மாற வேண்டும் என்பதைக் குறித்து பேசினார். வந்திருந்த சிறுவர் முதல் பெரியவர்கள் வரை எல்லாரையும் தேவனுக்கு தங்களை அர்ப்பணிக்க செய்தார். அனைவரும் தேவனால் தொடப்பட்டார்கள். ஆவிக்குரிய ஆகாரத்தோடு சரீரப்பிரகாரமான ஆகாரமும் கொடுக்க தேவன் கிருபை செய்தார். நீங்களும் இந்த ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்ல உங்கள் அன்புடன் அழைக்கிறோம்.

சாட்சி பகுதி

# வார்த்தையினால் உயிர்ப்பிக்கிறவர்



## சகோதரர். ஏசுதாசன், தூத்துக்குடி

நான் மிகவும் மனமுடைந்த சூழ்நிலையில் இருந்த போது யுடியூப்-பில் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற நேரலை நிகழ்ச்சியைப் பார்த்தேன். அன்று ஒளிபரப்பான நிகழ்ச்சியில் பாடல்கள் மூலமாக, தேவசெய்தியின் மூலமாக தேவன் என்னை தேற்றினார். நிந்தைகள் அவமானங்களை சந்தித்து, வேதனையில் வாழ்ந்த எனக்கும் என் மனைவிக்கும் அனறு நிகழ்ச்சியில் தேவனுடைய வார்த்தை கிடைத்தது. உன் ஏமாற்றங்கள், அவமானங்கள் மாறும் தேவன் அதை மாற்றி உங்களை தலைநிமிர்ந்து வாழ வைப்பார் என்ற அந்த வார்த்தையினால் நாங்கள் ஆறுதல் அடைந்து விசுவாசத்தில் பெலப்பட்டோம். இந்த நிகழ்ச்சியில் சொல்லப்படுகிற தேவனுடைய வார்த்தைக்காக, சகோதரருக்காக, சகோதரிக்காக நான் தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## சகோதரர். ஜானி, கரூர்

வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் நடைபெறும் ஆசீர்வாத உபவாச ஜெபத்திற்கு கடந்த மூன்று மாதத்திற்கு முன்னால் தான் வர ஆரம்பித்தேன். முதல் முறையாக நான் வந்த போது ஆராதனை வேளையில் சகோதரி அவர்கள் இந்த ஜெபத்திற்கு வந்திருக்கிற ஒவ்வொருவர் வாழ்க்கையில் உள்ள நீண்ட நாள் போராட்டம், பிரச்சனைக்கு ஆண்டவர் இன்று முடிவை கொண்டு வருகிறார் என்று சொன்னார்கள். நான் அந்த வார்த்தையை தேவன் எனக்காக தான் செல்கிறார் என்று விசுவாசித்தேன். ஜெபம் முடித்து விட்டு என் வீட்டிற்கு சென்ற பிறகு அன்றிலிருந்து என் வாழ்க்கையில், குடும்பத்திலிருந்த ஒவ்வொரு தடையான காரியங்கள், போராட்டமான சூழ்நிலைகள் மாற ஆரம்பித்தது, அடுத்த முறை ஜெபத்திற்கு வந்த போது நான் தேவனோடு நெருங்கி ஜீவிக்க, ஆவியில் பெலப்பட, தடைகள் உடைய, போராட்டம், பிரச்சனைகளில் வெற்றியை காண தேவன் கிருபை செய்தார். அவருக்கே எல்லா மகிமை கனமும் உண்டாவதாக.

## சகோதரி. ரேவதி, திருச்சி

நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தை சேர்ந்தவள். ஆனால் யுடியூப்-பில் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம் என்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து பார்ப்பேன். ஒவ்வொரு நாளும் இந்த நிகழ்ச்சிகள் எனக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. இந்த நிகழ்ச்சியைப் பார்த்து நான் தினமும் எப்படி ஜெபிக்க வேண்டும், தேவனுக்கு பிரியமாக வாழ வேண்டும், மற்றவர்களுக்கு தீங்கு செய்யக் கூடாது, தூய்மையாக வாழ வேண்டும் என்பதையெல்லாம் கற்றுக் கொண்டேன். இந்த நிகழ்ச்சிகளுக்காக நான் தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன்.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு

இணைந்து

# சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன்,
தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமையமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

**1. BANK TRANSFER**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI, MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | : L. VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

**2. இணையதளம் (WEBSITE)**

**WWW.JESUSLIVES.IN**

**3. காசோலை (CHEQUE):**

**JESUS LIVES TRUST (OR) L.VINCENT RAJ**

**4. GOOGLE PAY :**

**GPAY TO: 944 300 9333**

**5. மணியார்டர் (E.M.O)**

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை,
மதுரை - 625 402.

**6. Whatsapp மூலம்**

9442800449 என்ற எண்ணிற்கு Donate என்று டைப் செய்து அனுப்பி whatsapp மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை செலுத்தலாம்.

**நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று காணிக்கைகளை வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 447 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.**

நடப்புச் செய்தி



குட்டீஸ்...

# பாக்கெட் மணியை பேங்க்ல சேமிக்கலாம்

10 முதல் 18 வயதுக்குள் உள்ள குழந்தைகள் வரையறுக்கப்பட்ட அளவில் டெபிட்கார்டு, பாஸ்புக் மற்றும் இணைய வங்கி சேவைகளை பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இன்றைய டிஜிட்டல் உலகத்தில், குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே பணத்தின்மதிப்பு மற்றும் சேமிப்பின் அவசியத்தை கற்றுக்கொடுப்பதில் பெற்றோர்கள் அதிககவனம் செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாக, பல குடும்பங்கள் குழந்தைகளின் பெயரில் வங்கிக் கணக்குகளைத் தொடங்கி, மாதந்தோறும் சிறிய தொகைகளை சேமிக்க ஆரம்பித்துள்ளனர். நிதி நிபுணர்கள் கூறுவதன்படி, மாதம் ரூ.100 அல்லது ரூ.500 போன்ற குறைந்த தொகையிலிருந்தே சேமிப்பை தொடங்கலாம். முக்கியமானது தொகை அல்ல, சேமிக்கும் பழக்கத்தை குழந்தைகளுக்கு உருவாக்குவதே என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

State Bank of India, HDFC Bank, ICICI Bank மற்றும் Axis Bank உள்ளிட்ட பலமுன்னணி வங்கிகள் குழந்தைகளுக்கான சிறப்பு சேமிப்புக் கணக்குகளை வழங்குகின்றன. இந்த கணக்குகள் சாதாரண சேமிப்புக் கணக்குகளைப் போன்றே இருந்தாலும், பாதுகாப்பு மற்றும் பணப் பரிவர்த்தனை தொடர்பாக சில கட்டுப்பாடுகள் இதில் அமலில் உள்ளன. சில வங்கிகள் குழந்தைகளுக்காக தனிப்பட்ட டெபிட் கார்டு, மொபைல் பேங்கிங் மற்றும் சிறிய பரிசுத்திட்டங்களையும் வழங்குகின்றன.

ரிசர்வ் வங்கி விதிகளின்படி, 10 வயதிற்குக் குறைவான குழந்தைகளின் கணக்குகளை பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மட்டுமே நிர்வகிக்க முடியும். 10 முதல் 18 வயதுக்குள் உள்ள குழந்தைகள் வரையறுக்கப்பட்ட அளவில் டெபிட் கார்டு, பாஸ்புக் மற்றும் இணைய வங்கி சேவைகளை பயன்படுத்த அனுமதிக்கப் படுகின்றனர். ஆனால் தினசரி பணம் எடுக்கும் வரம்பு மற்றும் ஆன்லைன் செலவுகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டிருக்கும். இதன் மூலம் தவறான பயன்பாட்டைத் தடுக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

குழந்தைகளுக்கு சேமிப்பு பழக்கத்தை உருவாக்க பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. பிறந்தநாள் பரிசாக கிடைக்கும் பணம், சிறிய செலவிலிருந்து மீதமிருக்கும் தொகை அல்லது மாதாந்திர ‘பாக்கெட்மணி’யில் ஒரு பகுதியை சேமிக்க குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். இதன் மூலம் குழந்தைகள் பணத்தை திட்டமிட்டு பயன்படுத்தும் பழக்கத்தையும் கற்றுக்கொள்வார்கள். குழந்தைக்கு 18 வயது நிறைவடைந்ததும், அந்தக் கணக்கு வழக்கமான சேமிப்புக்கணக்காக மாற்றப்படும். புதிய KYC ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, கணக்கின் முழு கட்டுப்பாடும் அந்த நபருக்கே வழங்கப்படும். சிறு வயதிலேயே தொடங்கும் இந்த நிதி பழக்கம், எதிர்காலத்தில் பொறுப்பான பண மேலாண்மைமற்றும் பொருளாதார சுயநிலைக்கு அடித்தளமாக அமையும் என நிதி ஆலோசகர்கள் வலியுறுத்துகின்றனர்.

Owned & Published by: Bro. L.Vincent Raj & Editor Bro. L. Vincent Raj, Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren 54,A.I.B.E.A-Nagar, Paravai, Madurai - 625 402.
Printed by: SHARON PRINT SYSTEM, NO.51/7, AHIMSAPURAM FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER, SELLUR, MADURAI-625002


சென்னையில்
உபவாச ஜெபம்
அன்பரின் பாதத்தில் ஒருநாள்
ஜூன் 6
சனிக் கிழமை
9.30AM - 2.00PM
தேவனின் அன்பு ஊழியங்கள்
BKN A/C ஆடிட்டோரியம், எண் 5/6, ரிதர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.
EVG. L. வின்சென்ட்ராஜ்
EVG. கலா வின்சென்ட்ராஜ்
EVG. T. ஸ்டீபன்
தொடர்புக்கு: 94428 00449, 94980 00449


இந்த உன்னதமான சுவிசேஷ ஊழிய திட்டத்தில் எங்களோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்!
ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்றால் ஒரு மாதத்திற்கு 744 மணி நேரம்
மாதந்தோறும் உங்களால் முடிந்த ஆத்துமாக்களை இந்த கடைசி கால சுவிசேஷப்பணியில் தாங்க முன் வாருங்கள்.
1 மணித்துளி
ஆத்துமா
ரூபாய்
ஒவ்வொரு
மணித்துளிக்கும்
ஒரு
ஆத்துமா
One soul at a time
இணையதளம் மூலமாக தாங்கிட
G-PAY 9443009333

RNI NO. TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023

கன்னியாகுமரியில்

# ஸ்தோத்திரப் பெருவிழா

2026 ஜுன் 27 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு

## வண்டன் மிஷன் ஆலயம்

பள்ளியாடி, கன்னியாகுமரி.



தேவ செய்தியாளர்கள்

EVG. L. வின்சென்ட்ராஜ்

EVG. கலா வின்சென்ட்ராஜ்

தொடர்புக்கு: 94428 00449, 94980 00449

TO,

If Undelivered
(Please Return to)

**YESUVAI THINAM PARKIREN**

54, A.I.B.E.A. Nagar, Paravai,
Madurai - 625 402.
Tamil Nadu, South India.